**செ.வெ.எண்: 10** **நாள்: 04.03.2017**

## புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கைக்குறிச்சி கிராமத்தில் சீமைக்கருவேலமரங்கள் அகற்றும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கைக்குறிச்சி கிராமத்தில் சீமைக்கருவேலமரங்கள் அகற்றும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (04.03.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு கூறியதாவது:

சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை உத்தரவின்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதியிலும் சாலைகள், கால்வாய்கள், நீர்நிலைகள், குடியிருப்புப்பகுதிகள், தனியார் நிலங்கள் உட்பட உள்ள சீமைக்கருவேலமரங்களை முற்றிலும் அகற்றிட உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கைக்குறிச்சி கிராமத்தில் சீமைக்கருவேலமரங்கள் அகற்றும் பணிகள் தேசிய ஊரகப்பணியாளர்களைக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் வளர்ந்துள்ள சீமைக்கருவேலமரங்களை முற்றிலுமாக அகற்றுதல் மூலம் மக்களுக்கு மற்றும் விவசாயத்திற்கு தேவையான நிலத்தடி நீர் இதன் மூலம் கிடைக்கும். மேலும் சீமைக்கருவேலமரங்களை அகற்றுதல் மூலம் சுற்றுச்சூழல், கால்நடைகள் மற்றும் மனிதர்களுக்கு ஏற்படும் தீமைகள் தடுக்கப்படுகின்றன. பணித்தள பொறுப்பாளர் இதனை மேற்பார்வையிட்டு சிறு மரமாக இருந்தாலும் வேருடன் அதனை அகற்ற வேண்டும். இதன் மூலம் நமக்கு தேவையான நிலத்தடி நீர் சேமிக்கப்படுகிறது. எனவே அனைத்துப் பணியாளர்களும் ஒன்றுபட்டு மாவட்டத்தின் விவசாயம் மற்றும் குடிநீர் தட்டுப்பாடு போக்கிடும் வகையில் சீமைக்கருவேலமரங்களை முற்றிலும் அகற்றிட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.ஜெ.லோகநாதன்,இ.கா.ப., வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**